5th November 1965]

(இ) அதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 4,171.

(இ) அந்த நாடகங்களை உள்ளூர் கிராமவாசிகளையும், ஹரிஜனங்களையும் கொண்டு நடத்தியதால் அவற்றிற்கென ஹரிஜன நலத்துறை செலவு எதும் செய்யவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஜில்லா வாரியாக விளம்பர அதிகாரி என்று நியமிக்கப்பட்டு இருக்கிறார்களே, அவர்கள் கெஜட்டெட் போஸ்ட்டில் இருந்தும் தேர்தலில் நின்று தோற்றவர்கள் கூட இருக்கிறார்களே, அதன் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: தேர்தலில் நின்று தோற்றதால் விளம்பர அதிகாரியாக வரக்கூடாது என்ற சட்டம் கிடையாது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஜாதி ஒழிப்புப் பிரசாரத்திற்கான வேலையில் நல்ல பிரசங்கம் செய்யக் கூடிய திரு. கிருபானந்த வாரியார் போன்றவர்களைக் கொண்டு பிரசங்கம் செய்யவேண்டுமென்ற யோசனை இருந்தது. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: அவர்களையும் இப்போது முக்கியமான நிகழ்ச்சிகளில் அழைத்து அவர்கள் பிரசங்கத்தையும் கேட்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: இன்று ஜாதி ஒழிப்புப் பிரசங்கத்திலே இன்னும் நாம் அதிகமாகச் சாதிக்கவில்லை. இன்னும் நல்ல முறையில் பிரசாரம் செய்ய என்ன செல்வு ஆனாலும் பொருட்படுத்தாமல் பிரசாரம் செய்து, நாடகங்கள் நடத்தி, வெல்ஃபேர் சென்டர்கள் ஏற்படுத்தி, இதைத் தீவிரப் படுத்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இப்போது அதிகமாக ஏற்பாடு செய்து வில்லுப்பாட்டு கோஷ்டி ஏற்படுத்தி, மூன்று, நான்கு பேர்கள் போட்டு, துரிதமாக நடத்தி தீண்டாமை ஒழிப்புக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி

* 301 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) பக்கிங்ஹாம் கால்வாய், கூவம் நதி இரண்டையும் புனரமைக்க ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டம் போடப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI V. RAMAIAH: *(a)* & *(b)* Yes. Proposals for carrying out improvements to the Buckingham Canal and the Cooum are under consideration of Government. A comprehensive

[15th November 1965

scheme at an estimated cost of Rs. 470 lakhs for the development of buckingham Canal and a scheme for the development of the Cooum river at a cost of Rs. 80 lakhs have been recommended to the Government of India for inclusion in the Fourth Plan under Inland Water Transport.

திரு. ம. கமலநாதன் : கனம் தலைவர் அவர்களே, இந்த உள் நாட்டு நீர்வழி அபிவிருத்தியிலே பக்கிங்ஹாம், கூவம் தவிர வேறு ஏதேனும் கால்வாய் தமிழ்நாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த இரண்டு திட்டங்களோடு நகர எல்லைக்கு அப்பால் இருக்கக்கூடிய பக்கிங்ஹாம் களுவைக் கூட சேர்த்து சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதற்கும் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கூவம் ஆறு சம்பந்தப்பட்ட மட்டில் உத்தேசித்திருக்கக்கூடிய திட்டங்களின் விவரங்கள் என்ன என்று அறியலாமா ? இந்தத் திட்டம் அமல் நடத்தப்பட்ட பிறகு கூவம் ஆற்று நாற்றம் அதிகரிக்குமா, குறையுமா என்பதை அறிய லாமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் திட்டத்தை கனம் அங்கத் தினர் அவர்கள் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இது நாற்றத்தைப் போக்கக்கூடிய திட்டம் மாத்திரமல்ல, போக்கு வரத்துக்கு லாயக்காகவும் செய்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக் கிறது. அதற்காகத்தான் இவ்வளவு பணம் செலவு செய்யப் போகிறோம். ஏராளமான தண்ணீர் இருக்கவேண்டும், கால்வாயை ஆழப்படுத்த வேண்டும். அதன் பிறகு நாற்றமும் இல்லாமல் போய்விடும்.

திரு. ஜே. மாதா கவுடர் : கூவம் ஆற்று நாற்றம் சென்னை நகரத்தில் சகிக்க முடியவில்லை. அந்தப் பக்கத்தில் போனாலே இரண்டு பர்லாங்குக்கு நாற்றம் அடிக்கிறது. ஸிட்டிக்குள்ளேயே கூவம் ஆறு வராமல் வேறு பக்கமாக அதைத் திருப்புவதற்கு திட்டம் போடப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஆற்றினுடைய அமைப்பையே வேறு ஒரு இடத்திற்கு மாற்ற முடியாது. அதை ஆழப்படுத்தி போக்குவரத்திற்கு லாயக்கு உள்ளதாகச் செய்வதுதான் சுலபம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னையிலுள்ள கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் இவைகளைப்பற்றி அடிக்கடி கேள்வியை எழுப்புவதும், பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் அளிப்பதும் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்தத் 'தொடர் கதை' அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளாவது முற்றுப்பெறுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் முடிக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய

5th November 1965]

முயற்சி. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய நெருக்கடி நிலைமையில் இதற்கெல்லாம் ஒரு முக்கியமான இடம் கொடுக்கப்படுமா என்பதுபற்றி பார்க்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாற்றம் எப்பொழுதும் தொடர்ந்து இருக்கும். துர்நாற்றமா அல்லது நல்ல நாற்றமா என்பதுதான் பிரச்னை. நாற்றம் என்றால் அது 'தொடர்கதை' போல தொடர்ந்துதான் இருக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கூவம் ஆற்றில் தண்ணீர் தேங்கி நிற்பதால்தான் நாற்றம் உண்டாகிறது என்ற கருத்து இருந்து வருகிறது. ஆகவே, கூவம் ஆற்றில் தண்ணீர் தேங்காமல் ஓடிக்கொண்டிருப்பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்படும்?

கனம் திரு. வெ. ராமையா: எப்பொழுதும் மழை காலத்தில் தண்ணீர் ஓடிக்கொண்டு தான் இருக்கிறது. மழை இல்லாதபோது தண்ணீர் தேங்கி நிற்கிறது. தண்ணீர் தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பதற்கு கால்வாயை ஆழப்படுத்த வேண்டும். சமுத்திர தண்ணீர் இங்கே வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு பெரிய திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு வேதாரண்யம் கால்வாயைக் கொண்டுபோகும் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? தனியாக அதற்காக மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: இவையெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. திட்டம் பரிபூரணமாக பரிசிலனை செய்யப்பட்டு நடைமுறைக்கு வரக்கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை.

திரு. வை. சங்கரன்: குறிப்பாக கூவம் நதி நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்களுடைய வீட்டிற்குப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பக்கம் ரோடில் போனால் நாற்றம் சகிக்க முடியவில்லை. ஆனால் கூட்டுறவு மந்திரி இந்த நாற்றத்தை எவ்வாறு சகித்துக்கொண்டிருக்கிறரோ தெரியவில்லை. மந்திரிகள் நலமாக இருந்தால் தான் மக்கள் நன்றாக இருக்க முடியும். ஆகவே, இதைக் கருதியாவது சர்க்கார் கூவம் நதியை நல்ல முறையில் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் மந்திரி அவர்களை நேரடியாகப் பார்த்தால் நன்றாகத்தான் இருக்கிறார் என்பது தெரியவரும். நாற்றத்தினால் ஒன்றும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை மருத்துவ நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்.

பாரத் சேவக் சமாஜம்

* *302* **கேள்வி—திரு. மு. கருணாநிதி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னையிலுள்ள பார்த் சேவக் சமாஜத்திற்கு பொதுப் பணித்துறை ஏதேனும் காண்டிராக்ட் விட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?